Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா! 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 16 (30 - 05 - 1991) வியாழக்கிழமை ஓசை: 101

## உணவுப் பொருள் பெற 25 மைல் பிரயாணம்

(மட்டக்களப்பு)

வாகரைப் பகுதி மக்கள் தமது உணவுப்பொருள்களைப் பெற இருபத்தைந்து மைல் தூரத்திற்கு மேல் பிரயாணம் செய்து வாழைச் சேனைக்கு செல்ல வேண்டியிருப்பதாகத் தெரிகிறது வாகரை பல நோ. கூ. சங்கம் இயங்காமையே இதற்குக் காரணமாகும். போக்குவரத்து வசதியீனங்கள், இராணுவ நடவடிக்கை (4ஆம் பக்கம் பார்க்க)

# இ. காங்கிரஸ்கட்சி தலைவராக பி.வி. நரசிம்மராவ் தெரிவு



பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

அகில இந்திய இந்திரா காங்கிரஸ் தலைவராக பி. வி. நரசிம்மராவ் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் நரசிம்மராவ் இந்திரா காங்கிரஸ் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

செயற்குழுக் கூட்டத்தில் அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் ஏழு மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டதாக காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

நரசிம்மராவின் பெயரை அஜய் சிங் முன்மொழிந்தார் குலாம் நபி ஆஸாத்தும், ஜனநாத் பாரியாவும் வழிமொழிந்தனர். எஸ் வி. பகத் செயற்குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு தலைமை தாங்கும் முதலாவது தென் இந்தியர் இவராகும்.



பிரணாப் முகர்ஜி

## ஒய்வூதியக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

கீழ்க்கண்ட இலங்கைவங்கிக் கிளைகளில் ஓய்வூதியம் பெறாதவர்கள் இன்று முதல் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். கிளைகள் வருமாறு: சாவகச்சேரி, சுன்னாகம், காங்கேசன்துறை, ஊர்காவற்துறை (ஸ்ரான்லி வீதி) மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் கிளை: 2 (ஸ்ரான்லி வீதி).

ஓய்வூதியக்கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படும்.

## யாழ். ஆஸ்பத்திரியில் உளவள நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் உளவள நிலையமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் தப்பிய (4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் பெயரில் ராகம்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் பெயரில் ஒரு ராகம் இயற்றப் பட்டுள்ளது. இவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சரோஜ் மிஸ்ரா என்ற இசையமைப்பாளர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய காங்கிரஸ் தலைவர் பற்றிய சில குறிப்புகள்

இந்திரா காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு நரசிம்மராவ் ஆந்திர பிரதேசத்தில் ஹரீம் நகரில் 28 யூன் மாதம் 1921 ஆம் ஆண்டில் பிறந்தார்.

ஒஸ்மானியா, பம்பாய், நாக்பூர் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்ற நரசிம்மராவ் பி. எஸ். ஸி., எல். எல் பி, பட்டங்களை பெற்றவராவர்.

1957 முதல் 1977 வரை ஆந்திர சட்டசபையின் உறுப்பினராக இருந்தார். இதில் (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருபடைபலி; ஆயுதங்கள் மீட்பு

வவுனியா மாவட்டத்தில் உள்ள கொக்கு வெளிசந்தி முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது முகாமிற்கு மிக அண்மையில் வைத்து விடுதலைப் புலிகள் மேற் கொண்ட அதிரடித் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் சக்தி வாய்ந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது நேற்றுக் காலை 9-30 மணியளவில் இத் தாக் (4ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் காங்கிரஸில் சேர பிரியங்காவிற்கு அழைப்பு

இந்திய தேசிய இளைஞர் காங்கிரஸ் ராஜீவ் காந்தியின் புதல்வி பிரியங்கா காந்தியை கட்சியில் சேருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரியங்காவிற்கு ஏற்கனவே தாம் கடிதம் எழுதியிருப்பதாக இளைஞர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரொமேஷ் சிம் தாலா தெரிவித்தார்,

உத்தியோக பூர்வ

## ராஜீவ் வாசஸ்தலம் சோனியாவிற்கு ஒதுக்கீடு

(புதுடில்லி)

எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் ராஜீவ்காந்தி வசிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இல 10 ஜன்பத்சாலையிலுள்ள வீட்டில் திருமதி சோனியா காந்தியும், மகள் பிரியங்காவும் தொடர்ந்தும் தங்க அனுமதிப்பதென இந்திய மந்திரிய அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. அத்துடன் திருமதி (4ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் படுகொலை ஏகாதிபத்தியத்திற்கு வெற்றி

ராஜீவ்காந்தியின் படுகொலை ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கிடைத்த வெற்றி என 1987 இல் கொழும்பில் அணி வகுப்பு மரியாதையின் போது ராஜீவ் காந்தியைத் தாக்கிய முன்னாள் கடற்படை சிப்பாயான றோகண. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் தமக்கு வாழ்த்து தெரிவித்து ராஜீவ் தமது தாயாருக்கு கடிதம் எழுதியிருந்தார் எனவும் தெரிவித்தார்.

## ராஜீவ் கொலை தொடர்பான இந்திய விசாரணைக் குழு சிறிலங்கா வரவுள்ளது

(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் மரணத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு உண்டா என்பதைக் கண்டறிய ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வந்த இந்தியக் குழு இலங்கை வரவுள்ளது என கூறப்படுகிறது.

முன்னதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலா (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் ஒருவர் சுட்டுக் கொலை ஆறு தமிழர் கைது

திருமலை மாவட்டத்தில் உள்ள கிளிவெட்டி, நீலாப்பொல ஆகிய கிராமங்களில் உள்ள இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரை சுட்டுக் கொன்றதுடன்; ஆறு பொதுமக்களைக் கைதுசெய்து அதில் மூவரை தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த 23ஆம் திகதி கிளிவெட்டியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த மயில்வாகனம் ரவி என்பவரைக் கைதுசெய்த மறுநாள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கூனித்தீவில் நால்வர் கைது பெண்மீது கடும் சித்திரவதை

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சானில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கூனித்தீவு என்னும் இடத்தைச் சுற்றி வளைத்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இ. ஜெகசோதீஸ்வரன் (4ஆம் பக்கம் பார்க்க)

## குறைநிரப்பு பிரேரணை மூலம் பீரங்கிப்படகு கொள்வனவிற்கு 291 கோடி ரூபா கோரிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருக்கும் சிறிலங்கா ஊர்காவல் படையினர்க்கு கொடுப்பனவுகள் வழங்கவும் பீரங்கிப் படகுகள், குண்டுகள் வாங்கவும் 291 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை குறைநிரப்புப் பிரேரணைகள் மூலம் பெற சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவை தொடர்பான ஐந்து குறை நிரப்புப் பிரேரணைகளை கடந்த 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு சமர்ப்பித்தது.

ஊர்காவல் படையினருக்கான கொடுப்பனவு, ஆயுதம், சீருடை ஆகியவற்றுக்காக 21 கோடி 33 லட்சத்து 76 ஆயிரத்து 500 ரூபா பெறவும்,

தரைப்படையினரின் இராணுவ செயல்பாடுகளுக்காக 156 கோடி 23 லட்சத்து 82 ஆயிரத்து 718 ரூபா பெறுவ (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினருக்கு நிதி திரட்ட புதிய திட்டம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நிற்கும் சிறிலங்கா இராணுவத்தினரின் நலன்புரி நடவடிக்கைகளுக்கென அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை திரட்டுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இராணுவத்தினரின் நலன்களை பேணுவதற்கென அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை திரட்டுவதற்கான இணைப்பு நிர்வாகக்குழு ஒன் (4ஆம் பக்கம் பார்க்க)

யாழ்நகரில்
கம்பியூட்டர் கல்வி

- Basic
- dBase III+
- Lotus 1. 2. 3
- Word Processing

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன:
31. 05. 1991 (1-30 p. m.)
திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்
01. 06. 1991 (1-30 p. m.)
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
மேலதிக விபரங்களுக்கு:
UNIKCO COMPUTER CENTRE
37, Clock Tower Road,
JAFFNA.
(*/2592)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி





| அல்வினப்பர்தர்மன் ஸ்ரீபன் | செல்ஸ்ரின் ஆனந்தராஜா | டேவிட் பாலகிருஷ்ணன் சிறிதரன் |
|---|---|---|
| 13/6 5-ம்குறுக்கு தண்ணீர் தாங்கி வீதி, குருநகர். | 17/11 சென்ஜேம்ஸ வீதி, குருநகர், | 16, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். |

மரணத்தையும் நேசிக்கும்
பனப்பாங்கு உடையவர்தான் நீங்கள்
ஆனாலும் அதிகாலை வேளை
எழுந்த அதிர்வலைகள் உங்கள்
ஆவ்யைப பறிக்குமென்று
ஆர்தான் எதிர்பார்த்தார்?

எதிரிகளைக் குறிவைத்த
வெடிகுண்டு மடியிலேயே
வெடித்துவிட பிரிந்த உயிர்களை
எண்ணி நீர் சிந்தும்
கண்களில் நீங்காது உங்கள் நினைவு...

இவர்கள் 30-4-91 இல் நீராவியடியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரமரணமடைந்தனர்.

(B-2594)

உற்றார், உறவினர், நண்பர்கள்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை லெப்டினன்ட் அப்பா
( சுந்தரலிங்கம் குமரகுலசிங்கம் )

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 14 - 05 - 1966 | 30 - 04 - 1991 |

★ வீரவேங்கை லெப்டினன்ட் அப்பா
★ தேவதாஸ் லோறன்ஸ்
★ சுப்பிரமணியம் மதியழகன்
★ கார்த்திகேசு குமார்
★ பெரியசாமி நாகேஸ்
★ பியசேன காமினி
★ பாலகிருஷ்ணன் சிறீதர்
★ செலஸ்ரின் ஆனந்தராஜ்
★ தர்மன் ஸ்ரீபன்
★ சிவப்பிரகாசம் சிறிகாந்
★ ஆறுமுகம் சிவனேசன்

புலியாகி நாளை புயலாவேனென்று
புறப்பட்டு வந்த போது
வலிதான குண்டு வழிமோசம் செய்து
வரலாற்றை அழித்ததேனோ?
புதிதாக வந்த புலிவீரர் நாளை
புறம் பாட வந்த வீரர்
சதிகாரக் குண்டு தமிழீழ மண்ணில்
சாவோடு வந்ததேனோ?

30 . 04 . 91 யாழ். நீராவியடியில் எதிர்பாராத விதமாக நடந்த வெடிவிபத்தில் வீரமரணமடைந்த பதினொரு வேங்கைகளுக்கும் எமது 31 ஆம் நாள் நினைவஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(R- 1419)

- சகபோராளிகள்

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 30

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் கிரான்குளத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் திடீர் சோதனையின் போது காயமடைந்து சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
குமார் (நடராசா கிருஷ்ணகுமார் - இருதயபுரம், மட்டக்களப்பு)
வசந்த் (இராசேந்திரன் அருளானந்தராசா - அமிர்தகழி, மட்டக்களப்பு)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
மெய் (க. மெய்யழகன் - தம்பலகாமம்)

1987 ஆம் ஆண்டு நாவற்குழி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த
நிசாந்தன் (நடராசா இராசகுலேந்திரன் - குமரபுரம், பரந்தன்)

இதே ஆண்டு யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த
2ஆம் லெப் வாசன் (நடராசா சிறீகாந்த் - சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார்)

இதே ஆண்டு வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது தொண்டமனாற்றில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த
கஜன் (ரவி செல்வகுமார் - பண்டத்தரிப்பு)

இதே நடவடிக்கையின்போது உடுப்பிட்டியில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரமரணமடைந்த
வடிவு/லோகன் (கனகசபை லோகேஸ்வரன் - பண்டத்தரிப்பு)

இதே ஆண்டு உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் மரணமான மூன்று வயதுக் குழந்தை

1988 ஆம் ஆண்டு நீலாப்பளையில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த
விரலி (வீரக்குட்டி பேசின் நாதன் - மூதூர்)

1989 ஆம் ஆண்டு நீர்வேலி மாசிவனில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
சிவனேசன் (சபாரத்தினம் சிவனேசன் - நீர்வேலி)

இதே ஆண்டு மாமுனையில் இருந்த எமது முகாம் பகுதி இரண்டாவது நாளாக சுற்றி வளைக்கப்பட்டிருந்த போது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த
அசோக் (கந்தசாமி ஜெயந்தன் - வட்டுக்கோட்டை)
தரன் (குணரத்தினம் ஞானசேகரம் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)

வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர்
லெப். அலக்சன் (கணபதிப்பிள்ளை சிறீரங்கநாதன் - உடுத்துறைதெற்கு, தாளையடி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2586)

### சிந்தனைக்கு

உன் செயலுக்கு ஒப்பச் செயலையும், செயலுக்கு ஒடப்ச் சொல்லையும் இணங்கச் செய்.

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2209
த.பெ.எண் 05

# மனித உரிமைகள் பற்றி புதிய விளக்கம்

அரச ஊழியருக்கு பதவி உயர்வுகள் இன விகிதாசார முறையின் கீழ் வழங்கப்படுவது நீக்கப்படும் என இறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்நீக்கமானது சட்டமா அதிபர் சுனில் டி சில்வா அவர்களின் ஆலோசனையின் பேரில் செய்யப்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

சுங்கத் திணைக்களத்தில் நடைபெற்ற பதவி உயர்வுகள் இன விகிதாசாரத்தில் மேற்கொள்ளப் பட்டமை குறித்து சுங்கத் திணைக்கள தமிழ் அதிகாரி ஒருவர் இப் பதவிஉயர்வு நடைமுறை மனித உரிமைகள் மீறல் செயல் முறையாகும் என உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையிலேயே இச் சர்ச்சை உருவாகியது. தமிழ் அதிகாரியின் மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் அவரது வாதத்தை ஏற்றுக் கொண்டது. இதன் அடிப்படையிலேயே தற்போது இன விகிதாசார பதவி உயர்வு ரத்துச் செய்யப்படுகின்றது.

அதேவேளை, அரச பதவிக்கான ஆட்சேர்ப்பில் தொடர்ந்தும் இன விகிதாசாரம் பேணப்படும் எனப் பொது நிர்வாக அமைச்சு வட்டாரங்கள் அறிவித்துள்ளன. அதாவது சிறிலங்கா சட்ட திட்டங்களின்படி பதவி உயர்விற்கு இன விகிதாசாரம் பேணப்படுதல் மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும். அதேவேளை, அரச பதவிகளுக்கு ஆட் சேர்த்தலில் இன விகிதாசாரம் பேணப்படுதல் மனித உரிமைகளுக்குள் உட்பட்ட நடவடிக்கையாகும். இவ்வாறான சட்டங்கள், நியாயங்கள் இனவெறி தென்னாபிரிக்க சட்டங்களை ஒத்தவையாகும்.

இலங்கையைப் பொறுத்து இன்று அரச பதவிகளில் தமிழர்கள் இன விகிதாசாரத்தின் அளவில் கூட இருக்கின்றனரா என்பது சந்தேகமே. பல்கலைக்கழக அனுமதியில் இருந்து அரச உத்தியோகம் வரை இன்று இரு தசாப்தங்களாகத் தமிழர் தீவிர புறக்கணிப்பிற்கு உட்பட்டே வருகின்றனர். இது தொடர்பாக தொடர்ச்சியான ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டும் வந்துள்ளன.

கடந்த வருடத்தில்கூட வடக்கு-கிழக்கு நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் தமிழர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆட்சேர்ப்பில் இன விகிதாசாரம் கூடப் பேணப்படவில்லை. இப்பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் இருந்து மொத்தமாக தெரிவுசெய்யப்பட்ட இருபத்தைந்து பேரில் பன்னிரெண்டு பேர் சிங்களவராவர். அதாவது 48 வீதம் சிங்களவராவர். இவ்வாறாயின் வடக்கு கிழக்கில் சிங்களவரின் இன விகிதாசாரம் 48 வீதமா? இந்நிலை எப்பொழுது ஏற்பட்டது?

இலங்கையில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறிய காலத்தில் அரச சேவையில் தமிழர் சில முக்கிய பதவிகளை வகித்து வந்தனர். ஆனால், சிங்களவர் குரல் எழுப்பியது போன்றோ அல்லது தமிழர்களில் அநேகர் பெருமைப்பட்டுக் கொண்டது போன்றோ பெரும் எண்ணிக்கையில் தமிழர் உயர் பதவிகளை வகித்தது இல்லை. ஆனால் இடைநிலை உத்தியோகங்களில் கணிசமான அளவில் இருந்தனர்.

ஆனால், அதன்பின் வந்த பௌத்த, சிங்கள அரசாங்கங்கள் அந்நிலையை முற்றாக மாற்றி விட்டன. இன்று அரச உத்தியோகங்களில் பெரும்பாலும் இன விகிதாசார அளவில்கூட தமிழர் இல்லை என்றே கூறலாம்.

இந்நிலையில், பதவி உயர்விற்கு இனவிகிதாசாரமுறை பேணப்படமாட்டாது என்பதனால் தமிழர்கள் பெரிதாக எதுவித இலாபமும் அடைந்துவிடப் போவதில்லை. அத்தோடு பதவிகளுக்கு இனவிகிதாசார முறையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்போது உயர் பதவிகளுக்கு இன விகிதாசாரத்தை மீறி எவ்வாறு உயர் பதவிகளுக்கு வரமுடியும்?

மேலும் இனவாத நோக்கிலேயே தனது செயற்பாட்டைக் கொண்டிருக்கும் இறிலங்கா அரசாங்கம், சிங்கள அரச ஊழியரைவிட தமிழ் அரசஊழியர்களுக்கு என்ன சலுகைகளை வழங்கிவிடப் போகின்றது? பௌத்த சிங்களவர் ஒருவரை ஒதுக்கிவிட்டு தமிழருக்கு புலமைப் பரிசில்களை வழங்கப் போகின்றதா? அல்லது அவரின் வளர்ச்சிகளுக்கு வேறு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்றதா?

இந்நிலையில், பதவி உயர்வுகளில் இனவிகிதாசார முறை நீக்கம் என்பது ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாகும். இந்நடவடிக்கை பாடசாலைக்கு அனுமதி மறுக்கப்பட்ட மாணவனுக்கு நீ படித்தால் முதலாம் பிள்ளையாக வரலாம் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும்.

## யாழ். குடாநாட்டு வியாபார நிலையங்களில்

# ஆங்கில மருந்துப்பொருள்கள் பெரியளவில் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்களில் பாரிய மருந்துப் பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த ஜூன் மாதத்திலிருந்து பத்து மாதக் காலப் பகுதிக்கு ரூபா 80 லட்சம் பெறுமதியான ஆங்கில மருந்து வகைகள் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த மருந்து வகைகள் ஒரு மாதத் தேவைக்குத்தானும் போதாது. கொண்டுவரப்பட்ட சொற்ப மருந்து வகைகளை ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களுக்குச் சீரான முறையில் விநியோகிக்கவும் முடியவில்லையாம்.

கடந்த காலங்களில் 12 ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்கள் யாழ்.குடாநாட்டிற்குத் தேவையான மருந்துகளைக் கொழும்பில்கொள்வனவுசெய்தன. ஆனால், இப்பொழுது தனியார் ஆங்கில மருந்து வர்த்தக நிலையம் ஒன்று மாத்திரம் தான் யாழ் குடா நாட்டுத் தேவைக்கான மருந்து வகைகளைக் கொள்வனவு செய்கிறது.

சேவை அடிப்படையில் அல்லது வியாபார அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுவதாக ஆங்கிலமருந்து வர்த்தகர் ஒருவர் நமது செய்தியாளரிடம் தெரிவித்தார். மருந்து சீராக தமக்கு விநியோகிக்கப்படவில்லை என்றும் தனியொரு வர்த்தகர் கொழும்பிலிருந்து வாங்கி அனுப்புவதால் விநியோகத்தில் ஏற்பட்ட ஏகபோக உரிமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தனியார் மருந்துவமனை டாக்டர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதே வேளை, யாழ் குடாநாட்டுக்குத் தேவையான மருந்துகளின் வகையும், தொகையும் யாழ்ப்பாணத்தில் தான் முடிவு செய்யப்பட வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மே 10ஆம் திகதி இட்ட அதன் கடிதத்தில் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்கு யாழ்.குடா நாட்டுக்குத் தேவையான மருந்து வகைகளின் தொகையைத் தீர்மானிக்க டாக்டர்களான கங்காதரனும், கருணாகரனும் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைஅரசாங்க அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றதும், மருந்துவகைகளை யாழ்ப்பாணம் கொண்டுவரும் பணியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபடும்.

மருந்து வகைகளை யாழ்ப்பாணம் கொண்டு வரும் ஆங்கில மருந்து வர்த்தகருடன், வேறு இரு வர்த்தகர்கள் இந்தப் பணியில் ஈடுபடவுள்ளார்கள் என்று ஆங்கிலமருந்து வர்த்தகர் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த முயற்சியினால் யாழ்ப்பாணத்து மருந்துத்தேவையில் 75 வீதம் பூர்த்தியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி

(பருத்தித்துறை)

சிலாவத்துறையில் வீரமரணமடைந்த மேஜர் றஞ்சன் சித்தப்பா (தயாளன்) ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 7 பேர்கள் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன் ஏ கழகம் சம்பியனானது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் கடந்த 27 ஆம் திகதி மாலை 5 00 மணிக்கு இறுதிப் போட்டி நடைபெற்றது.

குருநகர் பாடும்மீன் ஏ கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் பி கழகம் மோதியது. ஏ கழகம் 4-0 என்னும் அடிப்படையில் வெற்றிக் கிண்ணம், சுற்றுக் கேடயம் ஆகியவற்றை சுவீகரித்துக் கொண்டது.

சிறந்த விளையாட்டு வீரராக பாடும்மீன் ஏ கழகத்தைச் சேர்ந்த கீதபொன்கலன் வெற்றிக் கிண்ணம் பரிசாகப் பெற்றார்.

மேற்படி போட்டியில் வட பகுதியைச் சேர்ந்த 36, கழகங்கள் கலந்து கொண்டதும் கடந்த ஒன்றரை மாத காலமாக போட்டிகள் நடைபெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கது. (21)

# சீனாவிற்கான கம்பியூட்டர் விற்பனை நிறுத்தம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்குஏவுகணைத் தொழில் நுட்பத்தைச் சீனா வழங்கியதை எதிர்க்கும் வகையில் சீனாவுக்கான உயர் நுட்பக் கம்பியூட்டர் விற்பனையை நிறுத்துவது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

சீனாவுடன் செயற்கைக் கோள் செலுத்தும் திட்டங்களில் அமெரிக்க நிறுவனங்கள் பங்குதாரர்களாக உள்ளன. இதையும் அமெரிக்க நிர்வாகம் தடுக்கும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கம்பியூட்டர் விற்பனைதொடர்பான தடை 3கோடி டாலர் சம்பந்தப்பட்டதென்று அந்த அதிகாரி சொன்னார்.

ஆயுதங்கள் வழங்கும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அமெரிக்கத்துணைவெளியுறவு அமைச்சர் அடுத்த மாதம் பீக்கிங் செல்லக்கூடும்.

## வடக்கிற்கு மின்சாரம்

# கூட்டுப்படை தலைமையகம் தொடர்ந்து மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு கொடுக்க வேண்டிய மின்சாரத்தை உடனடியாக வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிட்ட போதிலும் சிறிலங்கா முக்கூட்டுப் படைத் தலைமையகம் (ஜே.ஓ.சி.) தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதேவேளை இறைசேரி, மின்சாரம் வடபகுதிக்கு வழங்கப்படாததால் தமக்கு மாதாந்தம் கிடைத்து வந்த 1.5 கோடி ரூபாவாக கடந்த ஏழு மாதங்களாக (10.5 கோடி ரூபா வருமானம்) இல்லாது போயுள்ளது என்று கூறியுள்ளதாக தற்போதைய யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் இறைசேரி மேலதிக வங்கிக் கடனாக மத்திய வங்கியில் இருந்து ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கென பெருந் தொகைப் பணத்தை எடுத்துள்ளதாகவும் தாம் அறிந்து கொண்டதாக கூறினார்.

மின்சாரசபை மூலம் கிடைக்கும் வருமானத்தைத் தவிர எரிபொருள், சாராயம், சிகரட் போன்றவற்றால் கிடைத்த வருமானத்தையும் அரசு இழந்துள்ளதாகத் தெரிகிறது.

ஆனால் மின்சாரசபை மூலம் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் 2 மில்லியன் ரூபாவையும் லங்கா சீமெந்து தொழிற்சாலையில் 2 மில்லியன் ரூபாவையும் யாழ் மாநகர சபையினால் மட்டும் 1.5 மில்லியன் ரூபாவையும் கனையாக வருமானம் பெறக்கூடிய நிலை இருந்தது. ஏனைய பகுதிகளில் இருந்து மீதம் பத்து மில்லியன் ரூபாவையும் இறைசேரி வருமானம் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

# உலகம்போற்றும் அளவிற்கு போராட்டம் வளர்ந்துள்ளது

- பாப்பா

"உண்மையும் நேர்மையும் தன்மானமும் கொண்ட போராட்டம் என்றுமே தோற்றதில்லை." இவ்வாறு அளவெட்டி மாவீரர் கலையரங்கில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோரின் ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் பாப்பா தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று உலகம் போற்றும் அளவிற்கு எமது போராட்டம் வளர்ச்சியடைந்துள்ளது. இவ் வளர்ச்சிக்கு ஆரம்பத்திலேயே தம்மை உரமாக்கிக் கொண்டவர்கள் இவர்கள். இவர்களது கனவை வெகுவிரைவில் நாம் நனவாக்குவோம் எனக் கூறினார்.

தொடர்ந்து விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அங்கு உரையாற்றுகையில் புளொட்கும்பல்: அவர்களது உட்பூசல் காரணமாகவே அழிந்து கொண்டது. ஆனால் அவர்களால் அழிக்கப்பட்டவர்களை மக்களும் விடுதலைப் புலிகளும் இன்று நினைவு கூருகின்றோம் என்றார். இக்கூட்டத்தில் உரையாற்றிய காந்தி அவர்கள் "மறைந்த இப் போராளிகளின் பாதச்சுவடுகளில் நாம் எமது பாதங்களையும் பதிக்க வேண்டும் இதன் மூலமே இவர்களது இலட்சியம் ஈடேறும். எமது எதிர்கால சந்ததிகள் குழந்தைகள் தன்மானத்துடன் தமிழீழத்தில் தலைநிமிர்ந்து வாழவேண்டும் தொடர்ந்தும் அடிமை வாழ்க்கை வாழக் கூடாது அதற்காகவே இன்று நாம் போராடுகிறோம். இதனை உணர்ந்து மக்களாகிய நீங்கள் எம்முடன் இணைந்து போராட முன்வர வேண்டும்" எனத் தெரிவித்தார். (ச)

# இமாலயச் சாரலில் ராஜீவ் அஸ்தி தூவப்பட்டது

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் அஸ்தி நேற்று இமயச் சாரலில் தூவப்பட்டது. விமானம் ஒன்றில் பறந்து சென்ற ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தி இந்த அஸ்தியைத் தூவினார். இந்த ராஜீவின் பாட்டனார் ஜவஹர்லால் நேருவினதும், தாயார் இந்திரா காந்தியினதும், தம்பியார் சஞ்சய் காந்தியினதும் அஸ்திகளும் முன்னர் இவ்வாறு தூவப்பட்டது தெரிந்ததே.

# இல. தமிழ்ப் பெண்கள் தங்குமிடங்கள் சோதனை

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தங்கியிருக்கும் வீடுகளை தமிழகப் பொலிஸார் சோதனையிட்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் காந்தியின் மரணத்தோடு பெண் சம்பந்தப்பட்டிருப்பதால் தமிழகத்தில் உள்ள இலங்கைப் பெண்களின் வீடுகளும், அவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறதென சென்னைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தி.மு.க.கூட்டணி உறுப்பினர் நேற்று உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழகத்தில் லோக் சபாத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க தலைமையிலான கூட்டணி வேட்பாளர்கள் தமது தொகுதிகளில் பத்து மணி நேர உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 8-00 மணிக்கு ஆரம்பித்த இந்த உண்ணாவிரதம், மாலை 6-00 மணியுடன் முடிவடைந்தது.

ராஜீவ் காந்தியின் மரணத்தையடுத்து தி.மு.க. தலைமையிலான கூட்டணித் தொண்டர்களை இந்திரா காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க. தொண்டர்கள் தாக்கியதை எதிர்த்து இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தை நடத்துவதற்கு போதிய பாதுகாப்புத் தர வேண்டும் என்றும் வேட்பாளர்கள் மாநில அரசாங்கத்தை கேட்டுள்ளனர்.

# இழப்பீட்டுத்தொகை வழங்க ஆந்திராவில் கோரிக்கை

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் அண்மையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களைப் பற்றி சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவர் விசாரிக்க வேண்டும் என்றும் அதற்கு பொறுப்பானவர்களைச் சந்தித்து பாதிக்கப்பட்டோர்க்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் தேசிய முன்னணியின் தலைவர் என்.ரி. ராமராவ் கேட்டுள்ளார்.

தமது கோரிக்கைகளுக்கு மத்திய அரசாங்கம் இணங்காவிடில் இன்று முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதமிருக்கப் போவதாக அவர் தெரிவித்தார்.

### ராஜீவ் பெயரில்

புதிய ராகம் ஒன்றினை அமைத்துள்ளார் இந்தியாவின் தொலைக் காட்சி தூரதர்சன் இதனை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் என்றால் கமலம் கமலம் தாமரையைக் குறிக்கும் சொல்லாக இருப்பதால் 'கமல் ஹறி' என்று இந்த ராகத்திற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### உணவுப்

களால் பாலங்கள் உடைந்துள்ளமை, அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்குகள் என்பவற்றுடன், வாகரை வைத்தியசாலைப் பகுதியில் தங்கியுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் முகாமுக்குள் வைத்தே உணவுப் பொருள்களின் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றனராம். இதனாலேயே வாகரைப் பகுதி ப.நோ.கூ. சங்கம் கூட இயங்க முடியாத நிலையை எட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### இராணுவத்தினருக்கு

நிலை உடன் நிறுவுமாறு சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்காவை சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் கே.எச் ஜே விஜயதாசா கேட்டுக் கொண்டார்.

இந்த நிர்வாகக் குழுவிற்கு பாதுகாப்பு அமைச்சரின் மேலதிக செயலாளர் பந்துசேன தலைவராக நியமிக்கப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

### ராஜீவ் வாசஸ்தலம்

சோனியா காந்திக்கும், மகள் பிரியங்காவுக்கும் தேசிய பாதுகாப்புப் படையைக் கொண்டு பாதுகாப்பளிக்கவும் மத்திய அரசின் அரசியல் விவகாரக் கமிட்டி முடிவு செய்திருப்பதாக புதுடில்லியில் அரசு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

### புதிய காங்கிரஸ்

1962 – 1971 வரையும் அமைச்சராக இருந்தார்.

ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக 1971 1973 வரை கடமையாற்றிய நரசிம்மராவ் 1975 இல் அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். 1977 இல் இந்திய லோகசபை உறுப்பினரான இவர் 1980 1985 காலப் பகுதியில் இந்திரா அமைச்சரவையில் இந்திய வெளியுறவு அமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும், 1985 இல் ராஜீவ் அமைச்சரவையில் வெளிவிவகாரம், உள்துறை, பாதுகாப்பு, பதில் திட்டமிடல் மந்திரி அமைச்சராகவும் பதவி வகித்தார்.

1983 ல் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து இந்திரா காந்தி அவர்களால் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட முதலாவது அமைச்சரும் நரசிம்மராவேயாவார்.

தெலுங்கு அக்கடமியின் தலைவராகவும், மற்றும் தக்கண பாரத் ஹிந்தி பிரசார சபை உப தலைவராகவும் செயலாற்றியுள்ளார்.

நரசிம்மராவ் எட்டுப் பிள்ளைகளின் தந்தை. பிள்ளைகளில் ஐந்து பேர் ஆண்கள், மூன்று பேர் பெண்கள்.

# "காத்தவராயன"

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அகதிகள் புனர் வாழ்வு நிதியொன்றினைத் திரட்டுவதற்காக நாளை வெள்ளிக்கிழமை 3 00 மணிக்கு காத்தவராயன் நாடகத்தை நடத்தவுள்ளது. இந்த நாடகம் யாழ் பல்கலைக் கழக மாணவர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

## கலந்துரையாடல்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4 00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. முத்தமிழ்விழா தொண்டர்களாக நியமிக்கப்பட்ட வலிகாமம் பிரிவில் உள்ள மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் என்பதால் சகல உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது.

### வவுனியாவில்

குதல் மேற்கொள்ளப்பட்டது: இத் தாக்குதல் நடைபெற்ற சமயம் கொக்கு வெளி சந்தி இராணுவ முகாமில் இருந்து நொச்சிமோட்டைப்பக்கமாக இராணுவத்தினர் முன்னேறிக் கொண்டிருந்தனர். இந்த முன்னேறும் முயற்சியின் போது முகாமின் காவலரண் ஒன்றில் இருந்து மிக நெருக்கமாக சுமார் எண்பது யார் தூரத்தில் நின்று இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்ததில் ஸ்தலத்திலேயே இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து மிகுதி இராணுவத்தினர் காவல் அரணை நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

இத் தாக்குதலில்:-

- ★ ஏ கே. எல். எம். ஜி - 01
- ★ இயந்திரத் துப்பாக்கி ... மகசின்-03
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி- 01
- ★ ரவைக் கூடு - 03
- ★ ஜே. ஆர் கைக்குண்டு- 02
- ★ ஐ. எம். ரவைகள் - 350

ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

### கூனித்தீவில்

(வயது 20), சி. ஜெகதீஸ்வரன் (வயது 25), இ. சகுந்தலா தேவி வயது 34), சி. தட்சணாமூர்த்தி வயது 60) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் சகுந்தலா தேவி என்ற பெண்ணை முகாமில் வைத்து சித்திரவதை செய்தபின்னர் விடுவித்து மீண்டும் இரண்டு மணி நேரம் கழித்து கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றனர். அத்துடன் தட்சணாமூர்த்தி என்பவரை சித்திரவதை செய்த பின்னர் விடுதலை செய்தனர்.

### பீரங்கிப்படகு

தற்கு குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினருக்காக பீரங்கி ஏற்றிச் செல்லும் கப்பல், கடலோரத் தாக்குதல் படகு, ஆயுதங்கள், வெடிகுண்டுகள் மற்றும் அவசர தேவைகளின் பொருட்டு 53 கோடி 50 லட்சம் ரூபாவும்;

விமானப் படைக்கென 53 கோடி 30 லட்சம் ரூபாவும். பொலிசாரின் ஆயுதக் கொள்வனவு தேவைகளுக்காக 6 கோடி 70 லட்சம் ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### இந்திய விசாரணைக்குழு

ளர் சிறில் ரணதுங்கா, ராஜீவ் காந்தியின் மரணம் குறித்து விசாரணை நடத்த தம்மாலான உதவி அனைத்தையும் செய்ய விரும்புவதாக தெரிவித்திருந்தார்.

ஈ. பி. ஆர். டி. எப்பிற்கு

# இடைக்கால அரசு அமைக்க ஏனைய குழுக்கள் அனுமதி

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவின் இடைக்கால நிர்வாகப் பொறுப்பை எதியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி (ஈ. பி ஆர். டி எப்) ஏற்பதற்கு ஏனைய கிளர்ச்சிக் குழுக்கள் அங்கீகாரம் தெரிவித்துள்ளன. மூன்று கிளர்ச்சிக் குழுக்களும் பங்கேற்கும் இடைக்கால நிர்வாக அமைப்பொன்று ஒரு மாத காலத்தில் செயற்படத் தொடங்குமெனவும், ஒருவருட காலத்திற்குள் தேர்தல் நடத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் அமெரிக்காவின் ஆதரவிலான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் கிளர்ச்சிக் குழுக்களிடம் எதியோப்பியாவில் ஸ்திரமான நிலை ஏற்படுவதற்கு, அடிஸ் அபாபாவிற்குள் ஈ பி. ஆர். டி எவ்வினர் அனுமதிக்கப்படவேண்டுமென அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார்.

# நேட்டோ அமைப்பு மறுசீரமைப்பு

(பிறேசில்லஸ்)

நேட்டோ அமைப்பு மறுசீரமைக்க இருக்கின்றது. ஐரோப்பாவின் பிரச்சினை மட்டுமன்றி உலக விவகாரம் அனைத்தையும் கையாளக்கூடிய வகையில் அது புனரமைக்கப்படவுள்ளது. சோவியத் ஆபத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாக்க நேட்டோ ஸ்தாபனம் 1949 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 42 ஆண்டுகள் செயற்பட்ட இவ் அமைப்பின் எதிர்காலம் பற்றி ஆராய அமெரிக்க இராணுவ அதிகாரிகளும் அங்கத்துவ நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களும், பெல்ஜியத்தில் மாநாடு கூடியுள்ளனர்.

ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்படுமென அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நேட்டோ தலைமையலுவலகத்துக்கு வெளியே கூடியிருந்த மக்கள் ஐரோப்பாவிலுள்ள அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் அகற்றப்படல் வேண்டுமெனக் கோஷமெழுப்பியுள்ளனர்.

# 1000 ரூபா கள்ள நோட்டு; 4 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பில் ஆயிரம் ரூபாய் கள்ள நோட்டை வைத்திருந்த நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பொலிசார் ஆயிரம் ரூபா கள்ள நோட்டு புழக்கத்திலிருப்பதை கண்டுபிடித்துள்ளார்கள் என்றும், இது சம்பந்தமாக இதுவரை நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் முக்கிய நபர் ஒருவரை தேடி வருவதாகவும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிவாரணப் பொருள்களை

# படைமுகாம் அருகில் விநியோகிக்க உத்தரவு

(மட்டக்களப்பு)

இராணுவ முகாம்களுக்கு அருகாமையில் வைத்தே உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படல் வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லா உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாம். ஆனால் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எந்தத் தடங்கலுமின்றி ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்களின் விநியோகம் நடைபெறுகின்றது.

# தலைமையை ஏற்கக் கோரி அன்பரசு உண்ணாவிரதம்

இந்திரா காங்கிரஸின் தலைமைப் பதவியை சோனியா காந்தி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரி இந்திரா காங்கிரஸ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. அன்பரசு நேற்று சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார்.

நாட்டின் நன்மைக்காகவும், கட்சியின் ஐக்கியத்தை காப்பதற்காகவும் நெருக்கடியான இக்கட்டத்தில் ராஜீவின் மனைவியான சோனியா காந்தி தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இரா. அன்பரசு கேட்டுக் கொண்டு நேற்றுக் காலை முதல் மாலை வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

### யாழ். ஆஸ்பத்திரியில்

வர்களை வழிப்படுத்தல் இந்த நிலையத்தின் பிரதான நோக்கமாகும்.

உளவள வைத்திய நிபுணர் டாக்டர் டி. ஜே சோமசுந்தரமும், அருட்திரு. செல்வரெட்ணம் அடிகளாரும் ஒருங்கிணைந்து மேற்படி நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

### ஒருவர் சுட்டுக்

அவரைக் கொண்டுசென்று அக்கிரமத்தைச் சேர்ந்த இராமப்பிள்ளை முத்துக்குமார் என்பவரைக் கைதுசெய்து அவரை அங்கேயே சுட்டுக்கொன்றனர்.

மேலும் 25ஆம் திகதி நீராப்பொல என்னும் இடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கங்குவேலி கிராமத்தைச் சுற்றிவளைத்து ஆறு பொதுமக்களைக் கைதுசெய்து விசாரணையின் பின் மூவரை மட்டும் விடுதலைசெய்தனர். ஏனையோரை தமது முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர். இவர்களின் பெயர் விபரம் வருமாறு: சின்னத்தம்பி சிவஞானமூர்த்தி (வயது 24), சித்திரவேல் நாகராசா (வயது 40) சித்திரவேல் சுந்தரலிங்கம் (வயது 23).

## சமாதான நீதிவான்கள் நியமனம்

உள்ளூராட்சி தேர்தல்களில் வெற்றி பெற்றோர் சமாதான நீதிவான்களாக நியமனம் செய்யப்படுவர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், போட்டியிட்டு வெற்றி பெற்ற சகல உறுப்பினர்களும் சமாதான நீதிவான்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர் என்று சிறிலங்காவின் நீதி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.